# வரதன் கண்ட வேங்கடவன்

ஸ்ரீ. உவே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி

விசித்ரா தேஹ ஸம்பத்தி: ஈஶ்வராய நிவேதிதும் ।
பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்த பாதாதி ஸம்யுதா ॥ (ஸ்ரீ.வி.த.)

மாயவன்றன்னை வணங்க வைத்த கரணம் இவை (இரா.நூ.67). ''நபநாயதி சேதஸௌ ந ஜிஹ்வா ந நமஸ்யத்யத நைததுத்தமாங்கம்'' (யாதவாப்யுதயம் 15.70) என்கிறபடியே சேதநன் தனக்கு, பகவான் தந்த கரணங்களை பகவதநுபவத்திலே விநியோகப்படுத்தக் கடவன் என்று வ்யக்தமாகிறது. ''நீணாகம் சுற்றி'' (11.7) என்ற திருமொழியில் பரகாலன் கரண விநியோக ப்ரகாரத்தை ப்ராப்யத்துக்கு முதற்படியான பகவத்விஷயத்திலே நிரூபித்தார். ஸ்ரீகுலசேகரப்பெருமாள் ''தேட்டரும் திறல்தேன்'' (பெரு. திரு.2) என்ற திருமொழியில் அதனை ப்ராப்யத்துக்கு முடிந்த நிலமான பாகவத விஷயத்திலே நிரூபித்தார். ''புள்ளூரும் பொன் மலையைக் காணாதார் கண் என்றும் கண்ணல்ல கண்டாமே'' (11.7.1), ''மெய்யடியார்கள் தம் ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அது காணும் கண் பயன் ஆவதே'' (2-1) என்றுமிறே அவர்கள் பாசுரம் இருப்பது. ''யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ'' (தை.உ) என்று உபநிஷத்து. பகவத் ப்ரபாவம் வாசாம் அகோசரம் என்றது. ''ஆஹ்லாதஶீத நேத்ராம்பு: புலகீக்ருத காத்ரவாந், ஸதா பரகுணா விஷ்ட: த்ரஷ்டவ்ய: ஸர்வதேஹிபி:'' என்ற ஶாஸ்த்ரம் பாகவத ப்ரபாவம் வாசாம் அகோசரம் என்று கூறுகிறது. இவ்வர்த்தம் 4-2-9 ஈட்டில் காணத்தக்கது. ஆக, பாகவத ப்ரபாவம் வாக்குக்கு நிலம் அன்று என்றும், வாக்குப் படைத்த பயன் அடைய அவன்றள் பெருமை பேச வேண்டும் என்றும் தேறிற்று. ஸ்துத்யமான பகவத் விஷயத்தில் ''நேதி நேதி'' என்று உபநிஷத்து இயத்தா நிஷேதம் செய்தது. இங்கு பாகவத விஷயத்திலும் ஒக்கும்.

ஸம்ஸாரிகளாகிறார் அழுக்குடம்பு எச்சில் வாய் படைத்தவர். உடம்புக்கு அழுக்காவது அஸேவ்யரை வணங்குகை. வாய்க்கு எச்சிலாவது அஸேவ்யரைத் துதிக்கை. இப்படிப்பட்ட ஸம்ஸாரிகளிலே அடியேனும் ஒருவன். ஆகையால் அஸத்கீர்த்தந காந்தார பரிவர்த்தந பாம்ஸூலமான அடியேன் வாக்கைப் பரமபாகவத ஶிகாமணியாய் தீமதாம் அக்ரேஸரராய் அஸ்மதாசார்யரான ஸ்ரீ உவே. காரப்பங்காடு ந்யாய வேதாந்த வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமியுடைய வைபவ கதந முகேந ஶூத்தமாக்கிக் கொள்கிறேன்.

''வரதன் கண்ட வேங்கடவன்'' என்பதை கர்த்தரியும் கர்மணியுமாகக் கொண்டு ''வரதன் கண்டான் வேங்கடவனை'' என்றும், ''வரதனைக் கண்டான் வேங்கடவன்'' என்றும் இருவகையாகப் பொருள் கொள்ளலாம். ஸ்ரீ. உவே. காரப்பங்காடு தேஶிக வரதாசார்ய

ஸ்வாமியுடைய பரம கடாக்ஷத்தால் ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்களை அறியப் பெற்றவர் நம் ஸ்வாமி. ஆகையால் ''இவர் வரதன் கண்ட வேங்கடவன்'' என்பது வ்யக்தம். வரதனை (அடியேனை) பரம கருணையோடு கடாக்ஷித்து ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்களை அநுக்ரஹித்தார் நம் ஸ்வாமி. ஆகையால் இவர் ''வரதனைக் கண்ட வேங்கடவன்'' என்பதும் வ்யக்தம். கூரத்தாழ்வான் போல் நம் ஸ்வாமி ஆசார்ய ஶிஷ்ய லக்ஷண ஸீமாபூமியாய் எழுந்தருளி இருக்கிறார். பொருளல்லாத அடியேனைப் பொருளாக்கி அடிமை கொண்ட நம் ஸ்வாமி வைபவம் பேசி க்ருதார்த்தனாகவும் க்ருதஜ்ஞனாகவும் ஆகிறேன்.

ஆசார்ய வைபவத்தை நம் ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யாரம்பத்தில் ''ஸத்ஸந்தாந ப்ரஸூத ஸதாசாரஸம்பந்ந வேதவிதாசார்ய'' என்று அருளிச் செய்கிறார். ''அபிஜநவித்யா ஸமுதேதம் ஸமாஹிதம் ஸம்ஸ்கர்த்தாரம் ஈப்ஸேத்'' என்கிற ஆபஸ்தம்ப வசநமும் காணத்தக்கது.

### (1) ஸத்ஸந்தாந ப்ரஸூதத்வம்

ஸ்ரீஸ்வாமியுடைய குலப்பெருமையுள் அதடியான ஜ்ஞாநப் பெருமையும் மிகவும் போற்றத்தக்கது. எம்பெருமானார் முதற்கண் ''ஸத்ஸந்தாந ப்ரஸூத'' என்றிறே அருளிச்செய்தார். ''அவிச்சிந்ந வேதவித் ஸம்பந்திகுலே ஜந்ம அபிஜந:'' என்று ஆபஸ்தம்ப ஸ்ம்ருதி - உஜ்வலா வ்யாக்யாநம் கூறுகின்றது. நம் ஸ்வாமி முன்னோர்கள் ஏழு தலைமுறைகளாகப் பரம வித்வான்கள் என்பது ஜகத்ப்ரஸித்தம். ''ஏழாட்காலும் பழிப்பிலோம்'' (திருப்பல்லாண்டு-3) என்னும் வசநத்துக்கு இலக்கானவர்கள்.

நம் ஸ்வாமியுடைய திருத்தகப்பனார் ஸ்ரீ. உ.வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி என்று ஸுப்ரஸித்தரான மஹாவித்வான் ஆவார். உபய வேதாந்தங்களிலும் உபய ஸம்ப்ரதாயங்களிலும் வல்லவர். அவர் காலத்தில் அவருக்கு அவரே இணை என்பர் பெரியோர். ''ந பூதோ ந பவிஷ்யதி'' என்றால் மிகையாகாது. அவர் காட்டிலே (காரப்பங்காட்டிலே) சிங்கம். வேதாந்தக் காட்டிலே சிங்கம். பரவாதிமத்தேப மஸ்தக பாடநத்திலே சிங்கம். வித்வத் கோஷ்டிகளிலே அவர் தேஜஸ்ஸு ஸுப்ரஸித்தம். அன்னாருடைய திருக்குமாரரும் அந்தேவாஸியும் சிங்கக்குட்டியும் ஆனவர் நம் ஸ்வாமி என்றால் இவருடைய ஸத்ஸந்தாந ப்ரஸூதத்வமும் ஸத்ஸம்ப்ரதாய ஜ்ஞாநமும் எத்துணை உயர்ந்தது என்பதை நாம் அறியலாம்.

### (2) ஸதாசார ஸம்பந்நத்வம்

ஸதாசாரமாவது தன்னையும் ஶிஷ்யனையும் பலத்தையும் மாறாடி நினையாமை. ''ஸமாஹிதம்'' என்ற ஆபஸ்தம்ப வசநமும், ''விஹித ப்ரதிஷித்தேஷு அவஹித மநஸம்'' என்கிற உஜ்வலா வ்யாக்யாநமும் காண்க. நம் ஸ்வாமி, ''ஸ்வாசார்யனுக்கே உபதேஷ்ட்ருத்வமும் தனக்குத் ததுபகரணத்வமுமே உள்ளது'' என்கிற உள்ளத் தூய்மையோடு உபதேஶித்தருளுகிறார். ஆகத் தன்னையும் ஶிஷ்யனையும் உள்ளபடி நினைக்கிறார் நம் ஸ்வாமி என்று தேறுகிறது. க்யாதிலாப பூஜைகளாகிற த்ருஷ்ட ப்ரயோஜநங்களை ஒன்றாக மதியாதே ''இந்த ஶிஷ்யன் பகவத் பாகவத மங்களாஶாஸநபரனாக வேண்டும்'' என்றே

உபதேசித்தருளுகிறார் ஆகையாலே பலத்தை உள்ளபடி நினைக்கிறார் என்றும் தேறுகிறது. ஸகலப்ரமாண ஸங்க்ரஹ ப்ரணவ ஸ்தாநீயமான திருப்பல்லாண்டில் மங்களாஶாஸநார்த்த மாகவே பரோபதேஶம் ஶிஷ்டாக்ரேஸரரான பெரியாழ்வாருடைய அநுஷ்டாநத்தால் ஸித்தம். அவாப்தஸமஸ்த காமனுக்கு இதுக்கு மேற்பட ப்ரீதிஜநகம் இல்லை என்று கண்டு கொள்வது.

"அர்த்தம் ப்ரதிகூலம் பக்கல் ப்ராவண்யத்தைப் பிறப்பிக்கும்" என்னும் லோகதேஶிகன் திருவாக்குப்படி ப்ரதிகூலர் இருந்தவிடங்களிலே பலகாலும் செல்வது. அவர்களை அழைத்து விருந்திடுவது, அவர்கள் குணகீர்த்தநம் பண்ணுவதாம்படி அவர்கள் விஷயத்தில் ப்ராவண்யத்தைப் பிறப்பிக்கும் அர்த்தராகம் இல்லாதவராய், யத்ருச்சா லாப ஸந்துஷ்டராய், பரம விரக்தராய் நம் ஸ்வாமி எழுந்தருளியிருப்பது ஒன்றே இவர் ஸதாசாரத்துக்கு எடுத்துக்காட்டு என்னலாம். சுருங்கக்கூறின் பணத்துக்கு பகவத்விஷயத்தை விற்காதவர் நம் ஸ்வாமி என்று தேறும்.

## (3) வேதவிதாசார்யத்வம்

வேதார்த்த நிர்ணயம் ஆசார்யனுக்கு ஆவஶ்யகம். "யாவராய் நிற்கின்றதெல்லாம் நெடுமால் என்று ஓராதார் கற்கின்றதெல்லாம் கடை" (நான்.திரு. 54) என்றிறே துய்யமதி பெற்ற மழிசைப்பிரான் நிஷ்கர்ஷம். நம் ஸ்வாமி ஶாஸ்த்ரார்த்தங்களில் எவ்வளவு ஆழ்ந்த ஜ்ஞாநம் உடையவர் என்பதை அன்னாருடைய உபதேஶத் தெளிவு நமக்குக் காட்டும். "அவிஸ்த்ருதம் அஸந்திக்தம்" என்று பெருமாள் கொண்டாடிய திருவடி வாக்வைபவத்தை இன்று நாம் நம் ஸ்வாமி பக்கலிலே அநுபவிக்கிறோம்.

ஸ்ரீ. உ.வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி ஸந்நிதியில் திருப்பாவை, ஸ்ரீபாஷ்யம், பகவத்விஷயம், திருமந்த்ரார்த்தம், வேதாந்த வாதாவளி இவையும். ஸ்ரீ. உ.வே. தேஶிகவரதாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் ஶ்ருதப்ரகாஶிகை, ஸ்ரீவசநபூஷணம், ஆசார்ய ஹ்ருதயம் இத்யாதியும், ஸ்ரீ. உ.வே. ஆஸூரி ராமாநுஜாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் ந்யாய பாஸ்கரம் முதலானவையும் ஸேவித்துத் தெளிவுற்ற சிந்தையராய்த் திகழ்பவர் நம் ஸ்வாமி. "முற்பட த்வயத்தை யதிகரித்து இதிஹாஸ புராணாதிகளையும் அதிகரித்து பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாய மீமாம்ஸாதிகளையும் அதிகரித்துப் போது போக்கும் அருளிச் செயலிலேயாம்படியான நம்பிள்ளை" என்று பெரியவாச்சான் பிள்ளை ஸ்வாசார்யரான நம்பிள்ளையைக் கொண்டாடுகிறாப் போலே நாமும் நம் ஸ்வாமியைக் கொண்டாட ப்ராப்தம்.

பெருமாள் திருநக்ஷத்திரமான புனர்வசு நக்ஷத்திரத்தில் அவதரித்த நம் ஸ்வாமி அநுஷ்டாநத்தில் பெருமாளை ஒப்பர். உபதேஶத்தில் கீதாசார்யனான கண்ணனை ஒப்பர். உபதேஶிக்கும் முறையில் நம்பிள்ளையை ஒப்பர். வைராக்யத்திலும் கருணையிலும் ஸ்வாமி எம்பெருமானாரை ஒப்பர். உபதேஶத்தெளிவிலும் சாந்தியிலும் திருமேனி காந்தியிலும் மணவாளமாமுநிகளை ஒப்பர். லோகஹிதைஷித்வத்திலே ஸர்வேஶ்வரனையே ஒப்பர். இவருடைய ஓரோர் வகைக்கு ஒருவர் உபமாநபூமியாமதொழிய இவருடைய எல்லா வகைக்கும் இவருக்கு இவரே இணை.

''ஆசார்யனைக் கண்டால் பசியன் சோற்றைக் கண்டாற் போலே'' என்று லோகதேஶிகன் ப்ரபந்ந தினசர்யை அருளிச்செய்கிறார். சோறு ஶரீரோத்பாதகம், உத்பந்நஶரீரதாரகம், போக்யம். அதேபோல ஆசார்யன் ''ஸஹி வித்யாத: தம் ஜநயதி । தத் ஶ்ரேஷ்டம் ஜந்ம'' ''கரீயாந் ப்ரஹ்மத: பிதா'' என்ற ஆபஸ்தம் பாதி வசநப்படியே ஶிஷ்யனுடைய ஜ்ஞாந ஜந்ம ஹேதுவாயும், ''உன்சீரேயுயிர்க்குயிராய்'' (இரா.நூ.25) என்கிறபடியே தன் கல்யாண குணங்களை ஆவிஷ்கரித்து தாரகனாயும், ''உன்றன் மெய்யில் பிறங்கியசீர்'' (இரா. நூ.104) என்கிறபடியே தன் திருமேனி அநுபவம் கொடுத்து போக்யனாயும் உளன். ''பூதாநாம் ய: அவ்யய: பிதா'' என்று சொல்லப்பட்ட பகவான் அகார வாச்யன். பிதா - காரணம் - உத்பாதகன் - வித்யாப்ரதன் - ரக்ஷகன் - தஞ்சமாகிய தந்தை என்று கொண்டாடப்படுகிறான். பந்த மோக்ஷ ஸாதாரண காரணமான அவனைவிட மோக்ஷைக காரணமாய் உள்ள ஆசார்யன் ஶ்ரேஷ்டன் என்பது இவன் தன் தனிப்பெருமை. இவனும் நம்மை உண்டாக்கி வித்யா ப்ரதாநத்தாலே ரக்ஷித்து அபதே போகாதபடி நியமித்துளன். பல ஶிஷ்யர்களுக்கு அத்யாத்மோபதேஶம் செய்தருளி ஸம்ப்ரதாய ரக்ஷணம் செய்ய அவர்களை ஆளாக்கியது இக்காலத்தில் நம் ஸ்வாமிக்கேயுள்ள தனிப்பெருமை.

நம் ஸ்வாமி, தம்மிடத்தில் ''ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப'' என்கிறபடியே ஜகத் விக்யாதங்களாக வேண்டும் என்னும் பரமமான திருவுள்ளம்கொண்டு அதற்குச் சேரக் கடாக்ஷித்து உபதேஶித்தருளுகிறார் என்பது உலகம் அறிந்த உண்மை. நஞ்ஜீயர் நம்பிள்ளையை (நம்பூர் வரதாசாரியரை) அவ்வாறு கடாக்ஷித்தார் என்பது பெரிவாச்சான் பிள்ளை வ்யாக்யாநத்தில் பலவிடங்களில் (பெரிய திருமொழி 1-2-10, 1-9-2, 8-10-3, 10-2-1, திருவாய்மொழி 6-7-9) காணத்தக்கது.

''தேசாரும் சிச்சன் அவன் சீர்வடியை ஆசையுடன் நோக்குமவன்'' (உபதேச.65) என்கிறபடியே நம் ஸ்வாமி திருமேனியே நமக்குத் தஞ்சம் ''ஆசறுதூவி யென்னும் பாஹ்யாப்யந்தர ஶுத்தி'' (ஆ.ஹ்.154) என்னும் ஆசார்ய ஹ்ருதய ஸூத்ரத்தின்படியும், ''ஆசறுதூவி வெள்ளைக்குருகே (திருவாய் மொழி 7-8-8) என்று ... உள்ளும் புறம்பும் நிர்மலமாயிருக்கும் குருகே'' என்னும் மணவாளமாமுநிகள் வ்யாக்யாநப்படியும் ஆசார்யன் திருமேனி பாஹ்யாப்யந்தர ஶுத்தம் என்று அறியலாம்படியான உள்ளத்தூய்மையைக் காட்டும். நம் ஸ்வாமி உடல் தூய்மை அடியார் கண்குளிரக்காணும் விருந்து. இது செவ்விமாறாமல் நித்யமாய்ச் செல்லவேணும்.

நம் ஸ்வாமிக்கு இனியது ஸ்ரீபாஷ்யாதி ப்ரவர்த்தநம். அவருக்கு இன்னாதது வ்யர்த்த காலக்ஷேபம், வ்யர்த்த வாக்ஜாலம். நம் ஸ்வாமி விரும்புவது வாழ்க்கையிலும் பேச்சிலும் அலங்காரத்திலும் எளிமை. அவர் விரும்பாதது இம்மூன்றிலும் படாடோபம். அவர் செய்வது ஸதஸம்ப்ரதாய பரிரக்ஷணம். அவர் செய்யாதது பகவத் பாகவத அபசாரம். அவர் நினைப்பது லோகம் க்ஷேமம் அடையவேண்டும் என்று. அவர் நினையாதது லோகம் துன்பம் அடைய வேண்டும் என்று. அவர் சொல்லுவது ஶாஸ்த்ரார்த்தம். அவர் சொல்லாதது பூர்வாசார்ய வ்யாக்யாந விருத்தம்.

நம் ஸ்வாமி பலருக்கு ஸ்வாமியாய் எழுந்தருளி இருந்தாலும் ''அரங்கமாளி என்னாளி'' (பெரிய திருமொழி 7-3-4) என்னும் பரகாலன் பாசுரப்படியும், ''ஸ்ரீரங்கநாத மம நாத'' (ஸ்ரீரங்ககத்யம்) என்னும் எம்பெருமானார் பாசுரப்படியும், ''அஸ்மத் குரோ: ராமாநுஜஸ்ய'' (ஸ்ரீவைகுண்டஸ்தவம்) என்னும் ஆழ்வான் பாசுரப்படியும், அடியேன் ''என்னையாளுடையப்பன்'' (பெரிய திருமொழி 2-3-2) என்று அநுஸந்திப்பது ஸ்வாநுபவைக வேத்யம். ஸ்ரீஸ்வாமியும் பலரைக் கடாக்ஷித்திருந்தாலும் ''ஒருமகள் தன்னை உடையேன்'' (பெரியாழ்வார் திருமொழி 3-8-4) என்று ஸ்ரீவிஷ்ணுசித்த நாயகியை அவள் திருத்தாயார் அபிமாநித்தாற்போலவும், ஆண்டாளைப் பெரியாழ்வார் அபிமாநித்தாற்போலவும், ஆழ்வானை எம்பெருமானார் அபிமாநித்தாற்போலவும் அடியேனை விஶேஷ கடாக்ஷம் செய்தருளியுள்ளார் என்பது ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் உத்த்ருத்ய புஜம் உச்யதே. நம் ஸ்வாமிக்கு ஆசார்யன் வரதன் (தேஶிக வரதாசார்யர் ஸ்வாமி) நம் ஸ்வாமிக்கு ஶிஷ்யன் வரதன் (அடியேன்) நம் ஸ்வாமிக்கு பெருமாள் வரதன் (காரப்பங்காடு பேரருளாளனான தேவப்பெருமாள்). ஸ்வாமி திருமேனி க்ஷேமத்திற்கும், ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் உள்ள நித்யஸம்ஶ்லேஷத்திற்கும் ஸ்வாமி வகுத்துக் கொடுத்த மார்க்கம் தப்பாமல் அடியேன் நடக்க வேண்டுவதற்கும் மங்களாஶாஸநம் செய்து நிற்கிறேன். நம் ஸ்வாமி வாழி! அவர்தம் கருணை வாழி! அவர்தம் சீர் வடிவு வாழி வாழி வாழியே!

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்.